


# உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ளுங்கள்

**நமக்கு நாமே சொல்லிக் கொள்கின்ற நம்பிக்கை வார்த்தைகள் நம்மிடம் புதியசக்தியை ஏற்படுத்திவிடும். விடாதே, தொடர்ந்து செல், வெற்றி அருகில்தான்! நமக்கு நாமே துணை, சுற்றியிருக்கும் இருளுக்கு நாமே விளக்கு என்ற நம்பிக்கையை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.**

**வா**ழ்வில் மிகவும் சிக்கலான அல்லது சறுக்கலான சமயங்களில் நமக்கு எதுவுமே கைகொடுக்கவில்லையென்று உணருகின்ற தருணத்தில் நாம் திணறித்தான் போகிறோம். அந்த தருணத்தில் திக்கற்றக் காட்டில் மாட்டிக் கொண்டோம் என்றால் அப்போது எங்கோ ஒரு தூரத்தில் தெரியும் குடிசை விளக்கின் ஒளி நமக்கு எவ்வளவு நம்பிக்கையும், ஆறுதலையும் தருகின்றது!



ரமேஷ்

அதுபோல நமக்கு நாமே சொல்லிக் கொள்கின்ற நம்பிக்கை வார்த்தைகள் நம்மிடம் புதியசக்தியை ஏற்படுத்திவிடும். விடாதே, தொடர்ந்து செல், வெற்றி

அருகில்தான்! நமக்கு நாமே துணை, சுற்றியிருக்கும் இருளுக்கு நாமே விளக்கு என்ற நம்பிக்கையை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஸ்டீவன் கல்லகன் என்பவர் ஒற்றைமனிதராய் மாபெரும் அட்லாண்டிக் கடலைத் தனிப்படகில் கடப்பதற்காகப் புறப்பட்டார். வழியில் படகு பழுதாகி உடைந்து மூழ்கியது. உடைந்த படகு துண்டு ஒன்றை பிடித்துக் கொண்டு கடலில் தத்தளித்தார். கப்பல் எதுவும் வரவில்லை. உணவில்லை. துணையில்லை. இருளும், கடலின் கொடூரமும் அவரை மிரட்டின.

இந்த நிலையில், **78** நாட்கள் அலைகடலில் சிறு துரும்பாய்த் தத்தளித்தார். மிகவும் மெலிந்து போய்விட்டார். ஆனால் அவரின் மனஉறுதி சிறிதும் குறையவில்லை. ஆமாம்! அதுதான் அவரைக் காப்பாற்றியது.

பின்னர் அவர் சொல்கிறார், ''என்னால் இதைச் சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டேன். இதை எனக்கு நானே அடிக்கடி சொல்லிக் கொள்வேன். இவ்வாறு மன உறுதியை நான் வளர்த்துக் கொண்டேன்''. பேசுவதற்கு, ஆறுதல் பெறுவதற்கு யாரும் இல்லாத வேளையில், தனக்கு தானே பேசிக் கொண்டார். தனக்குத் தானே துணையாயிருந்தார்.

இதுபோன்ற சூழ்நிலைகள் கடலில் இல்லாவிட்டாலும், வாழுமிடத்தில், நமக்கு சில வேளைகளில் வரத்தான் செய்கின்றன. எல்லோருமே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நம் காயத்திற்கு நாம்தான் மருந்து இட்டுக் கொள்கின்ற நிலை. நம் கண்ணீரை நாம்தான் துடைக்க வேண்டிய கட்டாயம். அப்போதும் மறக்க வேண்டாம், நமக்குத் துணையாக, மூழ்காத தெப்பமாக, அணையாத விளக்காக ஒருவர் துணையிருக்கின்றார். அவர் நாம் தான்.

நம்மை நாமே தூண்டிக்கொள்கின்ற போது அசாத்தியமான சக்தி எங்கிருந்தோ நம்மிடம் ஏற்பட்டுவிடுகிறது. புதிய உயிர்ச் சக்தியை நாம் பெற்றுவிடுகிறோம். அதனால் நாம் மாற்றம் பெற்று விடுகிறோம். சாமானிய மனிதர் ஒருவர் இதை தன்னுடைய வாழ்வில் கடைபிடித்தார். தனக்கு தானே நம்பிக்கை ஏற்படுத்திக்

கொண்டு, புதிய சக்தியை உருவாக்கி கொண்டார். அதன் மூலம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தினார். அந்த சாமானியனின் சாதனையை நாம் கண்டிப்பாக தெரிந்துக் கொள்ளவேண்டும்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் தாலுக்காவை சேர்ந்தவர் ரமேஷ், வறுமையான விவசாய குடும்பத்தில் பிறந்தவர். மிகுந்த வறுமை யில் தனது பள்ளிப்படிப்பை தினம் ஐந்து கி.மீ. தூரம் நடந்துசென்று படித்தார். பள்ளியில் அறிவியல் ஆய்வுக் கூடங்களுக்கு காலில் காலணி இல்லாமல் உள்ளே அனுமதிக்கமாட்டார்கள்.

அப்போது மற்ற குரூப் மாணவர்களிடம் காலணியை கடன் வாங்கிப் போட்டு கொண்டு அந்த வகுப்பு முடிந்ததும் திரும்பக் கொடுத்துவிடுவார். அவரது தம்பியும் இவரும் ஒரே பள்ளியில் படித்த போதும் அவர்களுக்கு ஒரே ஒரு சீருடைதான் இருந்தது; அதை அணிந்துக் கொண்டு அவர்களுடைய பள்ளி வாழ்க்கை கழிந்தது.

வறுமையின் கோர தாண்டவத்தால் யாராவது ஒருவரைத் தான் கல்லூரியில் படிக்க வைக்கக்கூடிய சூழல் குடும்பத்தில் நிலவியது. அப்போது ரமேஷின் தம்பி நான் வேலைக்கு போகிறேன், என் அண்ணன் படிக்கட்டும் என்று விட்டுக் கொடுத்தார்.

கல்லூரியில் சேர்ந்த பின்பு ரமேஷ்க்கு அணிந்து செல்ல சரியான ஆடைகள் இல்லாத நிலையில் அவருடைய நண்பர்கள் இரண்டு ஆடைகளை கொடுத்து உதவினார்கள்.

ஆனால் கல்லூரியில் படித்த மற்ற மாணவர்கள் விதவிதமான ஆடைகளுடன் வரும்போது ரமேஷ் மனதளவில் பாதிக்கப்பட்டு கல்லூரிக்கு செல்லாமல் வீட்டிலே இருந்தார். இதை அறிந்த அவரது தந்தை கல்லுடைக்கும் வேலைக்கு சென்று அதன் மூலமாக கிடைத்த பணத்தை கொண்டு துணிகளை வாங்கி தந்து கல்லூரிக்கு அனுப்பினார்.

ஆனால் தன் குடும்பத்து வறுமையை விரட்ட வேண்டும் என்றால் தான் நன்றாக படித்தால் தான் முடியும் என்ற முடிவு செய்தார். கல்லூரியில் அனைத்திலும் முதலாவதாக வந்தார். அதனால் கல்லூரியில் சிறந்த மாணவன் விருது, துறையின் முதல் மாணவன் விருது என எல்லா விருதுகளையும் பெற்றார்.

இந்த நிலையில் கல்லூரி இறுதி தேர்வு வந்தது அதில் ஒரே ஒரு பாடத்தில் தோல்வியடைந்ததாக எதிர்பாராத விதமாக தேர்வு முடிவு வந்தது. இது ரமேஷுக்கு மிகப்பெரிய அதிர்ச்சியாக அமைந்தது. கல்லூரியின் சிறந்த மாணவன் விருது வாங்கியவர் தேர்வில் தோற்றுவிட்டார் என விமர்சித்தார்கள். அதனால் கேலி கிண்டல்களுக்கு ஆளானார்.

இது அவருக்கு பெரும் மனவலியை தந்தது. மறுகூட்டலுக்கு விண்ணப்பித்துவிட்டு காத்திருந்தார். வீட்டிற்கு சென்றால் பெற்றோர்கள் வருந்துவார்களே என்று நினைத்து கொண்டு கல்லூரி விடுதியிலே தங்கி இருந்தார். மறுகூட்டலுக்குப் பின் 78 மதிப்பெண்கள் எடுத்து தேர்ச்சி பெற்றார்.

இந்த சமயத்தில் வீட்டிற்கு வந்த ரமேஷ் தனது அக்காவிற்கு திடீரென்று ஏற்பட்ட இதயநோயால் அதிர்ச்சி அடைந்தார். தன்னுடைய கிராமத்தில் எந்த ஒரு மருத்துவ வசதியும் இல்லாத காரணத்தாலும், மருத்துவ செலவுக்கு பணம் இல்லாத காரணத் தாலும் தகுந்த சிகிச்சை அளிக்காமல் தனது அக்காவை இழந்தார். அக்காவின் மரணம் ரமேஷை மிகவும் பாதித்தது.

கல்லூரி படிப்பை படித்த ரமேஷ் சி.ஏ படித்துவிட்டு ஒரு சிறந்த ஆடிட்டர் ஆக வேண்டும். அதன் பிறகு தனது கிராமத்தில் வறுமையால் கல்வியை தொடர முடியாத பலருக்கு உதவ வேண்டும் என்பதை தனது இலக்காக தீர்மானித்தார்.

அவரது கிராமத்தை சேர்ந்த ஒரு பெண் பத்தாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் எடுத்திருந்தார். ஆனால் மேலும் படிக்க வைக்க குடும்பத்தாரால் இயலவில்லை. இதை கேள்விப்பட்ட ரமேஷ் நண்பர்களிடம் பண உதவி பெற்று பள்ளியில் சேர்த்துவிட்டார். அந்த பெண் 12ஆம் வகுப்பில் 1136 மதிப்பெண்கள் எடுத்து தேறினார். அவரை டாக்டர் ஆக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

மேலும் தனது அக்காவின் மரணத்தை போன்று தனது கிராமத்தில் மீண்டும் ஒன்று ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் தீர்க்கமாக இருந்தார். அதற்காக தன்னுடன் கல்லூரி நண்பர்களை எல்லாம் சேர்த்து கொண்டு அப்பெண்ணை டாக்டராக்குவது என முடிவு செய்தார்.

அந்த சமயத்தில் ரமணா திரைப்படம் வெளிவந்தது. அந்த திரைப்படம் ரமேஷ்க்கு மிகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அத்திரைப்படத்தை எடுத்த இயக்குநர் திரு.முருகதாஸ் இதற்கு உதவுவார் என்ற நம்பிக்கையில் அவரை சந்தித்தார். அவரின் உதவியும் பெற்று அப்பெண் செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் பயில இடம் கிடைத்தது.

அந்த சம்பவம் அவரது கிராமத்தில் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. அதுமட்டுமல்ல அங்குள்ள மாணவர்களுக்கு கல்வியை நோக்கி செல்ல ஒரு ஊக்கசக்தியாக அமைந்தது.

வேளச்சேரியில் ஒரு வாடகை வீட்டில் வசித்து வந்த ரமேஷ் கல்வி குறித்த எந்த உதவிகளுக்கும் என்னை அணுகலாம் என்றார். அந்த முகவரியை நம்பி மாணவர்கள் பலர் கல்விக்காக ரமேஷை அணுக ஆரம்பித்தார்கள்.

சி.ஏ படித்துக் கொண்டே ஆடிட்டர் அலுவலகத்தில் ஒரு சிறிய வேலையும் பார்த்துக் கொணடிருந்த ரமேஷ் தனது குடும்ப பொருளாதார சூழ்நிலையில் எப்படி இந்த மாணவர்களுக்கு எல்லாம் உதவுவது என்று கவலையடைந்தார். இருந்தபோதும் தன்னுடைய முகவரியை தேடி வரும் மாணவர்களுக்கு ஒரு சிறந்த முகவரி கிடைக்க வேண்டும் என்று முடிவு செய்து 2006-ல் அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளில் ‘முகவரி’ என்ற அமைப்பை தொடங்கினார்.

அடுத்தடுத்த வருடங்களில் முகவரியால் தங்களை உயர்த்திக் கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்தது. தன்னை தேடிவரும் மாணவர்களுக்கு தொடர்ந்து கல்விக்காக உதவ பல்வேறு புரவலர்களை அணுக ஆரம்பித்தார். ஆனால் உன் வாழ்க்கையே வறுமையில் இருக்கும் போது இதெல்லாம் உனக்கு தேவையா? என்ற எத்தனையோ விமர்சனங்களையும், அவமானங் களையும் தாண்டி தனக்கு தானே நம்பிக்கை ஏற்படுத்திக் கொண்டு முகவரியை தொடர்ந்து நடத்தினார்.

கனவு என்பது நிகழ்காலத்திற்கான கனவாக இருக்க கூடாது, அப்படி இருந்தால் அது கனவே அல்ல. கனவு பெரிதாக இருந்தால் தான் தலைமுறைகள் தாண்டியும் அதன் பலன் சென்றடையும் என்று

முடிவு செய்த ரமேஷ் தனது அமைப்பு மூலமாக 400க்கும் மேற்பட்ட மாணவர்களின் வாழ்வில் உயர்கல்வி என்ற ஒளியை ஏற்றி உள்ளார். அதில் 42 பேர் அரசு பணிகளில் இருந்து வருகிறார்கள். 108 மாணவர்கள் மருத்துவம் படித்து வருகிறார்கள். மற்றவர்கள் பொறியியல் மற்றும் மற்ற உயர்கல்வி படிப்புகளை படித்து வருகிறார்கள்.

தன்னுடைய தொடர் முயற்சியாலும் தன்னைத்தானே ஊக்கப்படுத்தி கொள்ளும் திறனாலும் ஒரு விதையாக போடப்பட்ட முகவரி இன்று ஒரு மிகப்பெரிய ஆலமரமாக வளர்ந்துள்ளது. அந்த வெற்றிக்கு மிக முக்கிய காரணம் ரமேஷின் தன்னம்பிக்கை, நேர்மை, நன்றியுணர்வு மற்றும் முகவரியின் வெளிப்படையான தன்மை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் முகவரியை நோக்கி எண்ணற்ற புரவலர்கள் உதவ முன் வந்தார்கள். முகவரியின் மூலமாக படித்த மாணவர்கள் நல்ல நிலையை அடைய வேண்டும் என்பது மட்டும் எங்கள் நோக்கம் அல்ல, மனித நேயமும், சமூக அக்கறையும் கொண்ட மாணவர் களாக உருவாக வேண்டும் என்பதிலும் முனைப்பாக உள்ளேன். அதுமட்டுமல்ல ஏழை மக்களுக்காக நேர்மையாக பணி செய்யும் அரசு அதிகாரிகளையும், மனிதாபிமானத்துடனும் கருணையுடனும் சேவை செய்யும் மருத்துவர்களையும் உருவாக்க வேண்டும் என்பது மட்டுமே எங்களது லட்சியம் என்கிறார் முகவரி ரமேஷ்.

வறுமையில் பிறந்து, வளர்ந்து, மருத்துவ வசதி இல்லாத காரணத்தால் தனது சகோதரியை இழந்து தனக்கு தானே நம்பிக்கையூட்டி கொண்டு முகவரி என்ற அமைப்பு மூலமாக பல மருத்துவர்களையும், அரசு அதிகாரிகளையும் உருவாக்கி இளம் வயதிலே சாதித்து மாற்றத்தை நோக்கி தன்னம்பிக்கையுடன் பயணிக்கும் ரமேஷ் என்ற சாமானியனின் சாதனை இன்றைய இளைஞர்களுக்கு தன்னம்பிக்கையூட்டும் உன்னத பாடமாகும்.

தன்னம்பிக்கையும், நேர்மையும், மனித நேயமும் கலந்திருக் கின்ற மனிதர்கள் மேற்கொள்ளும் பயணம் சுற்று வழிபோல தெரியலாம். ஆனால் அதுதான் நம்மையும் எதிர் நிற்பவர்களையும் ஒரு சேர உயர்த்தும் வழி, அது நேர்வழி, அதுதான் வெற்றியின் வழி.

—